# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2381 - 2024 අප්‍රේල් මස 19 වැනි සිකුරාදා - 2024.04.19

*2381 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 54 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, மே மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


53 - B 082561- 353 (2024/04)

# நானாவித அறிவித்தல்கள்

## மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் ( கொழும்பில் நடைபெறுகின்றது) குடியியல் /வர்த்தக நியாயாதிக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்

2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ், கொழும்பு 07, ரீட் எவனியு, இல. 14 இல் அமைந்துள்ள, நிறுவனம் பதிவு செய்த இல. PV 64628 எனும் ஈஸ்டர்ன்டிவலொப்மன்ட் என்டபிரைசஸ் ( பிரைவேட்) லிமிடட் பெயரிடப்பட்ட நிறுவனம் கௌரவ நீதிமன்றத்தினால் கலைப்பு செய்தல் பற்றிய வேண்டுகோள் தொடர்பான விடயம் தொடர்பானது.

வழக்கு இல. : CHC/ 11/ 2024/CO

தன்மை: ஒடுக்குதல்

ஸ்டேசன் எக்ஸ்போர்ட் ( பிரைவேட்) லிமிடட்,
இல. 833, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை,
த.பெ. இல. 1970, கொழும்பு -14.

மனுதாரர்

மேல் மாகாணத்தில் வாணிப மேல் நீதிமன்றத்தினால் மேற்படி பெயர் குறிப்பிடப்பட்ட கணக்கு வழக்கை தீர்த்து கலைப்பு செய்வதற்கான 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31ஆந் திகதி மனுவொன்று, 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி நீதிமன்றத்தில் மனுதாரருக்காக சட்டத்தரணி கே. உபேந்திர குணசேகரவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், குறித்த மனு 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 03 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்யப்படுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளது எனவும், குறித்த மனு தொடர்பான கட்டளையொன்றை புரிவதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக விரும்பும் குறித்த நிறுவனத்தின் கடன்தருநர் அந்த நபரின் விடயங்களுக்காக அதனை விசாரிக்கும் சந்தர்ப்பத்தில் தனிப்பட்ட முறையிலோ அல்லது தனது சட்டத்தரணி ஊடாகவோ தோன்ற முடியும் என்றும் மனுவின் பிரதியொன்று தேவையான குறித்த நிறுவனத்தின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கு உரிய கட்டணங்களைச் செலுத்தி கீழே ஒப்பமிடுபவரால் அது வழங்கப்படும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கே. உபேந்திர குணசேகர,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 135-1/3, குணசிங்ஹபுர அலுவலக வளாகம்,
சென் செபஸ்தியன் வீதி,
கொழும்பு 12.

**குறிப்பு**: அம்மனு சம்பந்தப்பட்ட விசாரணையின் போது சமுகமளிப்பதற்கு எண்ணுகின்ற எவரேனும் தன்னால் அவ்வாறு செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணி கே. உபேந்திர குணசேகர அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து கையளிக்க வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அவ் அறிவித்தலில் அறிவிக்கும் நபரின் பெயர் மற்றும் முகவரியும் கம்பனி ஒன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரி அறிவித்தலில் தெரிவிக்கப்பட வேண்டுமென்பதுடன் நபர் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களது (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின் ) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2024ஆம் ஆண்டு யூன் மாதம் 02 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னதாக கையளிக்க வேண்டும். அல்லது தபாலில் அனுப்புவதாயின் அத்தினம் குறித்த நேரத்திற்கு முன்னதாக கிடைக்கப்பெறும் விதமாக முன்கூட்டியே தபால் செய்யப்படல் வேண்டும்.

04- 350

**மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில் அதன் குடியியல் நியாயாதிக்கத்தை பிரயோகிக்கையில்**
**(கொழும்பில் அமைந்துள்ளது)**

இல. 528/8, தலாஹேன கார்டன் , கடுவல வீதி, பத்தரமுல்ல ( PV 15106) கம்பனிப் பதிவு இலக்கமுடைய UNI WALKER PACKAGING EXPORTS (PRIVATE) LIMITED விடயத்தில் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழ், நீதி மன்றத்தின் மூலம் ஒதுக்குவதற்கான விண்ணப்பம்.

வழக்கு இல. : CHC/ 17/ 2024/CO
தன்மை: ஒடுக்குதல்

கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 21, சேர் ராசிக் பறீட் மாவத்தையில் அமைந்துள்ளதும் இல. 21, சேர் ராசிக் பரீட் மாவத்தையில் "வெளிநாட்டு அலுவலகம்" எனும் பெயரில் அறியப்படும் மற்றும் அழைக்கப்படும் கிளையை அல்லது அத்துடன் வியாபாரத் தளத்தை கொண்டது

*மனுதாரர்*

மேற் கூறப்பட்ட கம்பனியை (கொழும்பில் அமையப்பெற்ற குடியியல் நியாயாதிக்கம் கொண்ட) மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான மனு 2024 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆந் திகதியன்று இல. 21, சேர் ராசிக் பரீட் மாவத்தையில் அமையப்பெற்ற கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இனால் குறித்த நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதென அறிவித்தல் வழங்கப்படுகின்றது. குறித்த மனுவானது 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 27 ஆந் திகதி குறித்த நீதிமன்றத்திற்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதென்றும் மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்புவராயின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அக்காரணத்திற்காக பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோன்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்கு தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி அதற்கென அறவிடப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்தி கீழ் காட்டப்பட்டுள்ளவரின் கையொப்பமிட்டவரின் கையொப்பத்துடன் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

முகம்மட் கலீல் முகம்மட் இர்சாட்,
மனுதாரரின் சட்டத்தரணி,
இல. 180, பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 04.

**குறிப்பு**: மேற்குறித்த மனுவின் விசாரணையின் போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வாராயின் அவர்/ அதன் நோக்கத்தை அறிவித்தல் மூலம் எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான முகம்மட் கலீல் முகம்மட் இர்சாட் அவர்களுக்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் அல்லது நிறுவனமாக இருப்பின் நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி அல்லது அவரின்/அதன் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றை குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதிய கால அவகாசத்துடன் 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதி பி.ப. 6.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

04- 349

## இலங்கை கொழும்புச் செட்டி சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*( டாக்டர்) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இலங்கை கொழும்புச் செட்டி சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் " எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:*

1. *கொழும்பு செட்டி சமூகத்தின் நலன்களை அனைத்து அம்சங்களிலும் ஊக்குவித்தல்;*
2. *சங்கத்தின் உறுப்பினர்களுக்கு சமூக உறவு, சமூக தொடர்பு மற்றும் பொழுதுபோக்கு ஆகிய விடயங்களில் பங்கேற்க வாய்ப்புகளை வழங்குதல்;*
3. *வறிய மாணவர்களின் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை மேம்படுத்த உதவிகளை வழங்குதல்;*

*பிறவும்.*

*( டாக்டர்) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே,*
*கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்.*

*04- 343*

---

## இலங்கை உயர்கல்வி செயற்திறனை மேம்படுத்துவதற்கான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*அஜித் மான்னப்பெரும ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53(1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "இலங்கை உயர்கல்வி செயற்திறனை மேம்படுத்துவதற்கான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம் " எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

*பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:*

*(அ) இலங்கை பல்கலைக்கழகங்களில் தற்கால மற்றும் உருவாகிவருகின்ற கல்விசார் அபிவிருத்தி விடயங்களில் ஒத்துழைப்பு வழங்குதல்;*

*(ஆ) சமூக ரீதியான பொறுத்தமான உயர்கல்வி கொள்கையை பல்கலைக்கழக நடைமுறையாக மாற்றுவதில் உதவி செய்தல்;*

*(இ) பல்கலைக்கழக முறைமையில் உள்ள கற்பித்தல், கற்றல் மற்றும் முகாமை ஆகியவற்றில் மேலோங்கிவரும் மற்றும் நடைமுறை எண்ணங்கள் மற்றும் தகவல்களை பகிர்ந்துகொள்வதற்கான பேரவையொன்றை ஏற்பாடு செய்தல்;*

*பிறவும்.*

*அஜித் மான்னப்பெரும,*
*பாராளுமன்ற உறுப்பினர்.*

*04- 347*

---

## ஸதஹம் சிதுவிலி பதனம கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*உதயன கிரிந்திகொட ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு பாராளுமன்றத்தின் 53 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் "ஸதஹம் சிதுவிலி பதனம" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள் ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

பின்வரும் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்:

(அ) மாணவ மாணவிகளுக்கான கல்வி நிலையங்கள் மற்றும் விடுதிவசதிகளை ஏற்படுத்தி அவற்றை நடாத்துதல்;

(ஆ) வறிய மாணவர்களின் கல்வியை ஊக்கப்படுத்துவதற்காகவும் மற்றும் விருத்தி செய்வதற்குமாக இலங்கை கல்வி நிறுவனங்களுக்கு அனுசரணை வழங்குதல்;

(இ) இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுவோருக்கு அவசிய உதவிகளை செய்தல்;

பிறவும்.

உதயன கிரிந்திகொட,
பாராளுமன்ற உறுப்பினர்.

*04- 344*